S. M. FERNANDO
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★
580, Hospital Road, Near Bank of Ceylon Jaffna.

பக்கங்கள்! நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ். எம். பெர்ணாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

சுடர்: 6 பிரமோதூத ஆடு மார்கழி மீ 24 உ செவ்வாய்க்கிழமை (08-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILy கதிர்: 43

# அரசு போரை விரும்பினால் புலிகளும் அதற்குத் தயார்!

## பாரிஸில் திலகர் நேற்று பேட்டி

பாரிஸ், ஜனவரி 8

விடுதலைப் புலிகளுடனான போரை தொடர்ந்து நடத்த ஜனாதிபதி பிரேமதாஸா எதிர்வரும் வியாழக்கிழமை முடிவு செய்தால், விடுதலைப் புலிகளும் போரைத் தொடர்ந்து நடத்தத் தயாராக இருக்கிறார்கள்.

—இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர். பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வைத்து ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்துக்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

இராணுவம் தொடர்ந்து போர் நிறுத்தத்தை மீறி வருகிறது என்றும் —

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்றும் திரு. திலகர் மேலும் கூறினார்.

ஆனால் அரசு யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்து போரில் இறங்க முடிவு செய்தாலே ஒழிய, விடுதலைப் புலிகள் தாமாக தமது யுத்த நிறுத்த அறிவிப்பை முறித்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டு எடுக்கமாட்டார்கள் என்று யாழ்ப்பாணத்தில் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசப்பட்டது.

இதற்கிடையில் —

தற்காலிக போர் நிறுத்தம் கைவிடப்படக்கூடிய அபாயம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விலைகளை உயர்த்த வதந்தித் தந்திரம்!

யாழ்ப்பாணம், ஜன. 8

தனித்த முயசி அடிப் ‘இல் எம்மவர்கள் பலே பேர்வழிகள்! அதிலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பது என்பது அவர்களுக்குக் கைவந்த கலை. பொருள்களுக்குத் தட்டுப்பாடான வேளையில் கொள்ளை லாபம் அடிப்பதும், செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்குவதும் அந்தக் கலைகளில் ஒன்று.

யுத்த நிறுத்தம் வந்ததோடு தடங்கல், தடை எதுவுமின்றி வவுனியா ஊடாக வாகனங்கள் வந்து போகின்றன. அதைத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ‘குமண’ வருகிறது

யாழ்ப்பாணம், ஜன 8

அத்தியாவசிய பொருள்களுடன் “குமண” கப்பல் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பலில் உணவு மற்றும் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய பொதிகள் யாழ். ஆஸ்பத்திரிக்கு தேவையான மருந்துகளும் தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கான மருந்துகளும் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

## யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர்

# படையினர் சுட்டு 6 புலிகள் பலி ரஞ்சனே ஒப்புக்கொண்டார்!

கொழும்பு, ஜன 8

டிசம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவு - விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு அமுலுக்கு வந்த பின்னர் - படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளினால் ஆறு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவே இதனை ஒப்புக்கொண்டார்.

நேற்று கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைஒப்புக் கொண்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் பல யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தினார். (உ-எ-6)

## ஐநூறு சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

வடக்கு - கிழக்கு மாகாண யுத்தத்தில் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட படையினரில் மட்டும், 500 க்கும் அதிகமானோர் கைகள், கால்களை இழந்துள்ளனர். 200 க்கும் மேற்பட்டவர்கள் அங்கு மரணமானார்கள்.

கடந்த ஆறு மாதங்களில் யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் உடனுக்குடன் அனுமதிக்கப்பட்டனர்கள் என்று சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

# யுத்த நிறுத்த மீறல் தொடர்வதாக விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன 8

தமது யுத்த நிறுத்த அறிவிப்பை ஸ்ரீலங்கா அரசுப் படைகள் தொடர்ந்தும் மீறி வருவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் குற்றம் சுமத்தின.

அரச படைகளின் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான பல சம்பவங்களை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்றும் சுட்டிக் காட்டின.

அவற்றில் சில வருமாறு:-

★ மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் தமிழர்களின் எட்டு வீடுகளை கடந்த வெள்ளியன்று உடைத்த படையினர் அவற்றிலிருந்து கதவுகள் மற்றும் நிலைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

★ கடந்த சனியன்று

[3 ஆம் பக்கம் பார்க்க]

# மீண்டும் கட்சி தலைவர்களுடன் வியாழன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஜன 8

அனைத்து அரசியல் கட்சிகளினதும் தலைவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஜனாதிபதி பிரேமதாஸா சந்திக்க இருக்கிறார்.

அரசாங்கத்தின் ஒரு வார கால தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் வியாழன் நள்ளிரவு 12 மணிக்கு காலாவதியாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் இச்சந்திப்பு இடம் பெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதுஎன்பது பற்றி, இந்த மாநாட்டில் கட்சிகளின் தலைவர்களினது கருத்துகளை ஜனாதிபதி கேட்டறிந்து கொள்வார். ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் இத்தகவலை வெளியிட்டார்.

யுத்த நிறுத்தம் தொடர்பாக இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அவதானிப்பதற்கான வாய்ப்பை இச்சந்திப்பு உண்டாக்கும் என்றும் அவர் சொன்னார். [உ-எ]

# அனைத்துக் கட்சி சந்திப்பிலேயே உறுதியான முடிவு எடுக்கப்படுமாம்

கொழும்பு, ஜன. 8

தமிழீழ விடுதலைப் புலிகள் முதலில் தமது ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று பாதுகாப்பு படையின் அதிகாரிகளும், அனேகமான அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர் என்றும்-

இது சம்பந்தமான உறுதியான முடிவு வியாழக்கிழமை நடைபெற இருக்கும் —ஜனாதிபதி தலைமையிலான— அரசியற் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்படும் என்றும்-

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா சொன்னார்.

நேற்று மாலை கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். (உ-எ-6)

# யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க செஞ். சங்கத்துக்கு அரசு கடிதம்

கொழும்பு, ஜன. 8

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரிவுத் தலைவர் திரு. பிலிப் கொன்ரசாலை அரசு கேட்டிருக்கிறது.

கடிதம் ஒன்றின் மூலம் அரசு இக்கோரிக்கையை விடுத்திருப்பதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு எதுவும் நியமிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## ஹெலி வீசிய பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

கொழும்பு எரிக்கரை ஆங்கில, தமிழ் பத்திரிகைகளின் செய்திகள், போட்டோ பிரதி செய்யப்பட்டு, துண்டுப் பிரசுரங்களாக நேற்று ஹெலிக்கொப்டரிலிருந்து யாழ். நகரப் பகுதிகள் மீது வீசப்பட்டன.

# தமிழக கடலோரப் பகுதியில் இந்திய கடற்படை தீவிரம்!

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் இந்தியக்கடற்படை தனது கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருப்பதாக இந்தியக் கடற்படைத் தளபதி எல். இராம்தாஸ் கொச்சியில் நேற்றுத் தெரிவித்தார்.

ஈழப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் சில தெரிவித்தன.

இதற்கிடையில் —

தமிழ்நாட்டில் ஈழத் தமிழ்ப் போராளிகள் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு மாநில அரசுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது

இத்தகவலை மத்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சஹாய் வெளியிட்டார்.

நேற்று லோகசபையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாக அளித்த பதிலிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். [உ-எ]

# சுயநிர்ணயம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜன. 8

“திரு. கிட்டு கூறியது போன்று தமிழ் தேசிய இராணுவம் ஒன்றை அமைக்க இடமளிக்க முடியாது; “சுயநிர்ணயம்” என்ற சொல்லுக்கே இடமில்லை.”

— இவ்வாறு கூறினார் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா.

நேற்றுக் கொழும்பில் ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. கிட்டுவின் பேட்டி வெளியான சில பத்திரிகைகளை இந்த மாநாட்டில் காட்டிய அமைச்சர் அது பற்றிய தமது கருத்துக்களை வெளியிட்டார்.

அப்போதே “சுயநிர்ணயம்” என்ற சொல்லுக்கே இடமில்லை என்று அவர் சொன்னார்.

ஆனால் மாகாணசபை, அதிகாரப் பரவலாக்கல் ஆகியவற்றின் மூலம் அவர்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

விடுதலைப் புலிகள் பேச்சு நடத்த முன் வந்தால், முன்னர் அவர்களுக்கு வழங்கியது போன்று கொழும்பில் முழுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

## முச்சந்தி முரளி



யுத்த நிறுத்தம் என்ட பேச்சுக்கே இடமில்லை [illegible] ஊர்.....!

# தமிழகத்தில் ஈழத் தமிழ் போராளிகள் இயங்குவதை அனுமதிக்க முடியாது

## சந்திரசேகர் கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 8

தமிழகத்தில் ஈழத் தமிழ்ப் போராளிகள் இயங்குவதை சிறிய விஷயமாக கருதிவிட முடியாது; அதனை அனுமதிக்கவும் முடியாது.

- இப்படி இந்தியப் பிரதமர் சந்திரசேகர் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அஸாம் தீவிரவாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக அதிர்ச்சித் தகவல் கிடைத்திருப்பதாகவும் —

இதுகுறித்து தமிழக அரசின் கவனத்தை புதுடில்லி அரசு ஈர்த்திருப்பதாகவும் திரு. சந்திரசேகர் சொன்னார்.

ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப வசதியாக அங்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

விட்டுத்தளபாடப்பொருள்கள், மூதிரைக் கதவு, ஆங்கில நூல்கள், பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம் ஆகியனவிற்பனைக்கு உண்டு. 103, கோதிவு வீதி, நாவற்குழி. [15456]

**நாற்றுக் கன்றுகள்**

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை, ஒட்டு எலுமிச்சை மா, பலா நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/6564)

**புத்தகங்கள்**

1991ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக 1990 டிசம்பரில் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகை விற்பனையாகிறது. தொகையாக வாங்குவோர்க்கு விலைக்கழிவு உண்டு விபரங்கட்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட், இருபாலைச்சந்தி. [15396]

**JAM போத்தல்கள் தேவை**

சுத்தமான JAM போத்தல் ஒன்று ரூ 3/- விதம்கொள்வனவு செய்யப்படும். வாரநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை பின்வரும் முகவரியில் கொடுக்கலாம். Taste Line Industries (Pvt.) Ltd. No. 14, சிவியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (15390)

**VACANCY**

Applications are invited for the post of "English Typist" (Female) with the knowledge of Accounts. Apply on or before 15 - 01 - 1991 K. A. Engineer's, 142, Palaly Road, Thirunelvely, Jaffna. (15383)

**கடவுச்சீட்டு தவறிவிட்டது**

வைத்திலிங்கம் குணபாக்கியம் வாட் நம்பர் 3 அனலைதீவு என விலாசமிடப்பட்ட எனது கடவுச்சீட்டு கடந்த 5 - 12 - 1990 அன்று புங்குடுதீவுச் சந்தையில் இருந்து இறுப்பிட்டிக்குச் செல்லும் பிரதான வீதியில் தவறிவிட்டது. கடவுச்சீட்டை கண்டெடுத்தவர்கள் இறுப்பிட்டி கிராமசேவையாளரிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [15453]

**சோதிட மாந்திரிக நிபுணர்**

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [15386]

**திருத்தம்**

அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்) என்பவரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி தினம் நேற்றாகும் ஆனால் நேற்றைய (07 - 01 - 1991) உதயனில் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி என்று பிரசுரமானது தவறாகும்.

# விக்னா டியூசன் சென்ரர்

52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**92** பிரிவு 2

**Sat., Sun. CLASSES**

**ஆரம்பம்: 12 - 01 - 91** (2. 15)

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | - பிரபல விரிவுரையாளர் |
| கணக்கியல் | - திரு வன்னியசிங்கம் |
| அளவையியல் | - திரு சுப்பிரமணியம் |
| தமிழ் | - திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | - திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | - திரு குணராஜா |
| அரசியல் | - திரு. சிலன் |
| வரலாறு | - திருமதி குணராஜா |

மு. குறிப்பு:

i கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகிறது

ii அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (சி/5605)

# 30 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 18 - 03 - 1948

★

மறைவு : 10 - 12 - 1990

## திரு. ஆறுமுகம் குணரத்தினம்

LL.B., Attorney - at - law

[பதில் உதவிப் பதிவாளர் / யாழ். பல்கலைக்கழகம்]

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
குறும்புப் பேச்சும் கூரிய கருத்தும்
கடமையில் கண்ணும் பழக்கத்தில் பண்பும் கொண்ட
பல்கலைக்கழக பதில் உதவிப்பதிவாளராம் நீ
பாதியில் எமைவிட்டு மறைந்ததேனோ
பாவி நாம் மறக்கமுடியுமோ.

ஆத்மசாந்திக்காக இறைஞ்சும்
நண்பர்கள்
யாழ். பல்கலைக்கழகம்

[15381]

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 - 01 - 1922

மறைவு: 20 - 12 - 1989

திதி: 08 01 1991



## திருமதி பெரியதம்பி - கண்மணி

செல்வித் தோகபி வருவிருந்து பார்த்திருந்து
நல்விருந்து செய்யும் இல்லத் தலைவியாய்
சுற்றாரும் மற்றாரும் போற்றும் கண்மணியாய்
மக்களுக்கு வழிகாட்டும் மாண்புடைத் தெய்வமாய்
நல்லறம் பலபுரிந்து அல்லும் பகலும்
அம்மன் பதம் மறவாத தெய்வமே

உங்கள் ஆன்மா சாந்தி அடைய அம்பாள் பதம் போற்றி நிற்கும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்

[சி-5617]

# மீண்டும் ஆரம்பம்

கலர்ப்படச்சுருள்கள், பிறின்டிங் செய்து கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| **QUICK PHOTO** K. K. S. Road, Tellippalai. | **QUICK PHOTO** Clock Tower Road, Jaffna. |

[15451]

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991-01-13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதென்பதை சகல பழைய மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

சி கனகசபாபதி,
செயலாளர்.

[15457]

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தக வகுப்புக்கள்

## DAY CLASSES

**பொருளியல்:- க. கலாகரன்**

90 Aug.- வினாவிடை வகுப்பு - பகுதி II - 10 மணி

91 Aug.- வங்கியியல் / தேசிய வருமானம் - 9 மணி

**கணக்கியல்:- S. K. பிரபாகரன்**

90 Aug.- கம்பனி முடிவுக் கணக்குகள் - 11 மணி

91 Aug.- செம்மையாக்கங்கள் - 10 மணி

**வர்த்தகம்:- பிரபல ஆசிரியர்**

90 Aug.- வினாவிடை பகுதி II - 12 மணி

அனைத்து பாடங்களும் வழமையான ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன.

மு. குறிப்பு:- 1. திங்கள் நாட்களில் நான்கு பாடமும் நடைபெறும்.
2. விடுதிவசதி செய்துகொடுக்கப்படும். [சி-5615]

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## வேலாயுதம் செல்வநாயகம் (செல்வம்)

('மாலினி' டிரான்ஸ்போட் உரிமையாளர்)

25-11-1990இல் வவுனியாவில் ஊர்காவற் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டபின் இனந்தெரியாதோரால் கொலையுண்டார். மரணச் செய்தி அறிந்து, ஆறாத்துயரில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 8-1-1991 (செவ்வாய்க்கிழமை) மைத்துனர் சு. கனகரத்தினத்தின் ஆவரங்கால் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்

சந்நமேனி,
[illegible]
அச்சுவேலி.

[15320]

# கல்வி ஆண்டு 1991

புதிய வகுப்புகள்

**6ம், 7ம் ஆண்டு வகுப்புகள்**

ஜனவரி 09ல் ஆரம்பம்

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

மேலும் சொற்ப அனுமதிகளே வழங்கப்படவுள்ளதால் இடத்திற்கு முந்துங்கள்.

[15395]

## Vacancy For Nursing Superintendent

Applications are being received from Nursing Sisters age 40 - 55 yrs with certificate in General Nursing and Midwifery for employment in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Experience in Nursing Administration and teaching essential. Apply to the Medical Superintendent, Green Memorial Hospital, Manipay before 31st January 1991.

(C/5619)

# 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 08 - 04 - 1907

●

உதிர்வு: 08 - 11 - 1990

## திருமதி பொன்னம்மா கோபாலகிருஸ்ணர்

(மலேயன் பென்சனியர்)

அன்புத் தாயே!

எம்மையெல்லாம் சிறப்புடன் வளர்த்து, பயிற்றுவித்து, பிள்ளைகளின் வாழ்வே தனதுயிர் என வாழ்ந்து எம்மையெல்லாம் பண்பும் பாசமுமாய் வளர்த்து நல்வாழ்வளித்த எங்கள் அன்புத் தாயின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

08 - 11 - 90 இல் சிவபதமடைந்த எங்கள் தாயின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், ஆறுதல் கூறியோர்க்கும், ஆறுதல் செய்திகளை அனுப்பியோர்க்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மகள்: சு. கனகம்மா

"விஜயபுரி"
சுணையந்தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. [15391]

# மரண அறிவித்தல்

## திருமதி கருணாதேவி துரைசிங்கம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த கருணாதேவி துரைசிங்கம் 7 - 1 - 91 திங்கட்கிழமை காலமானார். இவர் R. S. துரைசிங்கத்தின் [தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன இலாகா, யாழ்ப்பாணம்] மனைவியும், தேவராவின் தாயாரும், காலஞ்சென்ற S றொபேட் தவரட்ணம் [முன்னாள் அதிபர், உடுப்பிட்டி அ. மி கல்லூரி], அன்னம்மா அவர்களின் கனிஷ்ட புதல்வியும், திரு. N. சத்தியமூர்த்தி [ஆசிரியர், காரைநகர் இந்துக்கல்லூரி] திருமதி சத்தியதேவி சபாநாதன், திருமதி சாந்ததேவி நல்லையா, திரு. தியாகமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், திருமதி பவானி சத்தியமூர்த்தி, திரு. J. T. சபாநாதன், திரு S S. நல்லையா, திருமதி நளினி தியாகமூர்த்தி, திருமதி சித்திரா தம்பாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், திரு. S. S T. துரைசிங்கம், காலஞ்சென்ற திருமதி சிரோன் துரைசிங்கம் ஆகியோரின் மருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9 - 1 - 91 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
S. துரைசிங்கம்.

செல்வவில்லா,
[illegible]ராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

[15207]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கண்காணிப்பு அவசியம்

யுத்த நிறுத்தங்கள் அமுலுக்கு வரும்போது, அவற்றைக் கண்காணிக்கக் குழுக்கள் நியமிக்கப்படுவது வழக்கம். ஆனால் இப்போது அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தை — தாக்குதல் நிறுத்தத்தை — நிச்சயப்படுத்திக் கொள்ள கண்காணிப்புக் குழு எதுவும் நியமிக்கப்படவில்லை.

அதனால், இருதரப்பாரும் ஒருவரை மாறி மற்றவர் மீது, யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர். இக்குற்றச்சாட்டுக்கள் நான்கு நாள் மோதல் தவிர்ப்பு, தற்காலிகமானதாகி விடுமோ என்ற சந்தேக நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

இதனை அவதானித்த சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ.நா, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை நியமிக்குமாறு அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் முன்னர் பல தடவைகள் யுத்த நிறுத்தங்கள் வந்ததுண்டு. அப்போது கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டது உண்டு. அவற்றில் உள்நாட்டுப் பிரமுகர்கள் அங்கம் வகித்தனர். ஆனால் அவை சுயேச்சையாக, தன்னிச்சையாக, பாரபாடு இல்லாமல் இயங்க முடியவில்லை.

அதன் காரணமாக அவற்றில் அங்கம் வகித்த தமிழ் உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதையும் மறந்துவிட முடியாது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டுமானால் போரில் ஈடுபட்ட இரு சாராருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடக்கவேண்டியது மிக முக்கியமும், அவசியமும் ஆகும்.

பேச்சுவார்த்தை நடப்பதற்கு யுத்த நிறுத்தம் தொடரவேண்டும்.

யுத்த நிறுத்தம் குழப்பம் இல்லாமல நீடிக்க வேண்டுமானால், அது மீறப்படாதிருக்க வேண்டும். அதனைக் கண்காணிக்க அமைக்கப்படும் குழு உள்ளூர்க் குழுவாக இல்லாமல் சர்வதேச மட்டத்திலான ஒன்றாக இருப்பதே நல்லது என்பது அனுபவம்.

அந்தக் குழு மீறல் செய்வோரைப் பாரபட்சமின்றியும், நுணுக்கமாகவும் கண்டறியக் கூடிய நிபுணர்களைக் கொண்டதாக இருப்பது மிகவும் நல்லது. மனிதாபிமான உத்தரவாதத்தை அனுசரிக்கவும் அது உதவி புரியும்.

எனவே சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, ஐ. நா., செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவை அடங்கிய கண்காணிப்புக் குழுவை அரசாங்கம் நியமிக்க வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை என்றாலே அரசாங்கத்துக்கு "அலர்ஜி" என்பது எல்லோருக்கும் புரியும். அதற்காக அது தெரிவிக்கும் யோசனையைத் தட்டிக் கழிக்க அரசு முனையக் கூடாது.

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் பொறுப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்திருப்பதாக அறிய வந்துள்ளது. ஐ. நா. பிரதிநிதிகளையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தெளிந்த சிந்தையுடன் இருக்கிறதா என்பதைக் கண்காணிப்புக் குழு விடயத்தில் இருந்தே நிர்ணயித்துக் கொள்ளலாம்!

# இப்போது பந்து அரசின் பக்கம்; அவர்களே முடிவை எடுக்கட்டும்

## கனடா பத்திரிகைக்கு கிட்டு பேட்டி

கனடாவில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகை 'செந்தாமரை'க்கு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

தொலைபேசிமூலம் திரு. கிட்டுவைப் பேட்டி கண்டவர் திரு. டி. பி. எஸ். ஜெயராஜ்.

திரு. கிட்டு: எமது மக்களின் பாதுகாப்பும் எமது பிரதேசத்தின் ஒருமைப்பாடும் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகளின்போது தீர்வு காணக்கூடிய விஷயங்கள் அல்ல.

தமிழ் இராணுவம் ஒன்றை வைத்திருக்கும் உரிமைதான் எமது மக்களின் பாதுகாப்புக்குரிய ஒரே தேவை ஆகும். படையினரின் ஒரு பிரிவாகவோ, அல்லது துணைப் படையாகவோ அல்லது ஆயுதம் தரித்த பொலீஸ் பிரிவு ஆகவோ இந்த இராணுவம் இருக்க முடியும். பெயர்பற்றி எமக்கு அக்கறையில்லை.

ஆனால் எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆயுதம் தரித்த தமிழ்ப்படை ஒன்று தேவைப்படுகிறது.

வடக்கு – கிழக்கு என்று தற்போது அழைக்கப்படும் தமிழ் ஈழத்தை இரண்டாகப் பிரிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த இரண்டு விஷயங்களும் பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்டவை (Non negotia-ble) என்பதை எமக்கும் அரசுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய முயற்சிப்பவர்களிடம் நாம் தெளிவாகக் கூறிவிட்டோம்.

### சுயநிர்ணய உரிமை

கேள்வி: எந்த அடிப்படையில் உங்கள் இயக்கம் அரசுடன் பேச்சுக்களை நடத்தும்?

கிட்டு: தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அடிப்படைசுயநிர்ணயஉரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்ற அடிப்படையில் உண்டு.

தமிழீழ மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமை மற்றும் அரசியல் தனித்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தன்னாட்சியை உறுதிப்படுத்தும் ஆட்சி ஒன்றையே விரும்புகின்றனர்.

எமது மக்களின் பாதுகாப்பு மற்றும் தெளிவான அரசியல் தனித்தன்மை ஆகிய விஷயங்களில் நாம் இணக்கம் காண முடியாவிடினும் — எமது சுயநிர்ணய உரிமையை பாதிக்காத வண்ணம் தேவைப்படும் அரசியல் அதிகாரங்கள் குறித்து நாம் பேச்சு நடத்த முடியும்.

இந்த அரசியல் அதிகாரங்களின் அமைப்பு, இலட்சியங்கள் ஆகிய அம்சங்கள் கொண்டதாக பேச்சுக்கள் இருக்க வேண்டும். பேச்சுக்களின் போது எம்மீது எதுவும் திணிக்கப்படக்கூடாது.

பதவியில் இருந்த அரசுகள் 40 ஆண்டுகள் ஏமாற்றி வந்துள்ளன. பேச்சுக்களுக்கு அரசு வருமா என்பது தெளிவாக இல்லை. அப்படி பேச்சு நடத்த வந்தாலும் அப்பேச்சுக்கள் மூலம் நல்லது வெளியாக அவர்கள் அனுமதிப்பார்களா என்பதும் எமக்குத் தெரியாது.

மக்களின் துன்பங்களை அகற்ற எச்சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த வேண்டியது இயக்கத்தின் கடமையாகும். அதனால் இந்த முயற்சியை நாம் ஆரம்பித்துள்ளோம்; சமாதான வழிமூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் சந்தர்ப்பம் ஒன்றை நாம் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளோம்.

### சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறீர்களா?

கேள்வி: அப்படியானால் ஜூன் 11க்கு முன்னர் கிடைத்த அப்படி ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தவில்லை என்ற அபிப்பிராயம் நிலவுகிறதே. அது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

சமாதானம் என்ற போர்வையில் எமது உரிமையை பறிப்பதற்கு எக்கட்டத்திலும் எவரையும் அனுமதிக்க மாட்டோம்.

அமைதிப்படை விலகிய பின்னர் திருகோணமலையில் 35 இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன.

இப்படி அபிப்பிராயம் தெரிவிப்பவர்கள் இம் முகாம்கள் நிறுவப்பட்டமை பற்றிஎன்ன கூறப்போகிறார்கள்?

கேள்வி: மக்கள் படும் துன்பம் குறித்து அக்கறைப்படுவதாகக் கூறும் நீங்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு சமாதான வழியில் பிரச்சினையை தீர்க்கலாம் என்று கேட்பவர்கள் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

கிட்டு: அப்படி கேட்பவர்களை பார்த்து, "நாம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டால் இந்த நாட்டில் தமிழ் இனம் ஒன்று மிஞ்சி இருக்குமா?" — என்று நாம் கேட்கிறோம்,

### யுத்த நிறுத்த பிரகடனம் ஏன்?

கேள்வி: சர்வதேச அழுத்தங்கள், தமிழ் நாட்டில் இடம்பெறும் கைதுகள், கிழக்கில் ஏற்பட்ட பலவீன நிலை ஆகியன தான் யுத்த நிறுத்த பிரகடனம் செய்ய நிர்ப்பந்தித்ததா?

கிட்டு: பேச்சுக்கள் இடம் பெற சர்வதேச ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவற்றை அழுத்தங்கள் என்று கூறமுடியாது. ஆனால் அம்முயற்சிகள் உரிய மதிப்புடன் பரிசீலனை செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் எமது போராளிகள் அல்லர்.

முதலமைச்சர் கருணாநிதியின் ஏற்பாட்டின் பேரில் வைத்திய சிகிச்சை பெற்று வந்த எமது காயமடைந்த போராளிகள் தான் ஈவிரக்கமின்றி கைது செய்யப்பட்டனர்.

இந்திய இராணுவத்தையே எதிர்த்து நின்ற எம்மை தமிழ் நாட்டில் இடம் பெற்ற கைதுகள் பாதித்துள்ளன என்று கூறுவது பொருத்தமல்ல.

இராணுவ ரீதியில் வடக்கில் எமது கை ஓங்கி உள்ளது. கிழக்கில் அண்மைக் காலங்களில் நாம் வெற்றிகரமாக பல தாக்குதல்களை நடத்தி உள்ளோம். எமது பலம் கிழக்கில் அதிகரித்து வருகிறது.

ஆகவே நீங்கள் தெரிவித்தவை எல்லாம் யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்வதற்கான காரணங்கள் அல்ல

கிழக்கு மாகாணமக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கும் பிரச்சினையை, சமாதானமாக தீர்க்க அரசுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதற்கும் ஆகவே யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது.

சர்வதேசப் ... கண்காணிக்க குழு ஒன்று வேண்டும் என்று நீங்கள் கோராதது ஏன்?

கிட்டு: முறையான யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசு இன்னமும் இணங்கவில்லை.

யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனை இருதரப்பும் அமுல் நடத்தும் நிலை ஏற்படும் போது, யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் ஒரு ஒழுங்கைச் செய்து கொள்ளலாம்.

கேள்வி: இந்தியாமத்தியஸ்தம் செய்வதாக இருந்தால் மட்டுமே விடுதலைப்புலிகள் பேச்சுக்களுக்கு செல்வார்கள் என்று முன்னர் டாக்டர் பாலசிங்கம் கூறியிருந்தார். உங்களின் இன்றைய நிலைப்பாடு என்ன?

கிட்டு: நாம் அப்படி கூறியிருந்தும், மத்தியஸ்தம் செய்வதுபற்றி தனது விருப்பத்தை இந்தியா வெளிக்காட்டவில்லை. ஒரு சமிக்ஞை கூட இந்தியாவிடமிருந்து வரவில்லை.

காயமடைந்த எமது போராளிகளை தேடி கைது செய்வதில் தான் அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர். இந்த நிலையில் இந்திய மத்தியஸ்தம் என்பது செயலளவில் சாத்தியப்படுவது குறைந்து வருகிறது,

கேள்வி: லண்டனில் இலங்கைத் தூதர் சேபால ஆட்டிகலவுடன் நீங்கள் பேச்சு நடத்தியபோது யுத்த நிறுத்தம் பற்றியும்பேசினீர்களா?

கிட்டு: கடந்த ஜூனில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் கொழும்பு அரசுடன் நான் வைத்த முதல் தொடர்பு யுத்த நிறுத்த அறிக்கையை அனுப்பி வைத்ததேயாகும். ஆனால் எத்தனையோ ஸ்தாபனங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தன. இந்த ஸ்தாபனங்கள் ஊடாக கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வந்தன.

கேள்வி: கொழும்பில் அருளர் எடுத்து வந்த முயற்சிகள் பற்றி...

கிட்டு: மாத்தையா. யோகி, பாலசிங்கம் ஆகியோரை அருளர் சந்தித்து சமாதான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகச் சொன்னார்.

அதற்கு எதிர்ப்பு இல்லை என்று நாம் சொன்னோம். அருளர், சொந்தமாக சில முயற்சிகளை எடுத்து வருகிறார். அவர் எமது பிரதிநிதி அல்லர்.

### பின்னால் உள்ள நாடுகள் எவை?

கேள்வி: தற்போது இடம் பெற்றுவரும் சமாதான முயற்சியின் பின்னால் உள்ள நாடுகள், அமைப்புகள் எவை?

கிட்டு: குறிப்பாக எந்த நாட்டின் பெயரையும் நாம் கூற முடியாது. கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகள் முயற்சி எடுத்தன. செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பல ஸ்தாபனங்களும் முயற்சித்தன.

கேள்வி: அரசின் ஒத்துழைப்பு இன்றி காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் நீடிக்கமுடியுமா?

கிட்டு: நிச்சயமாக இல்லை. பேச்சுக்கள் நடத்துவது பற்றி சிந்திக்க அரசுக்கு கால அவகாசம் கொடுப்போம். காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் என்ற காரணத்தில், வருடக் கணக்கில் கால அவகாசம் கொடுக்கமாட்டோம்.

கேள்வி: இந்த யுத்த நிறுத்தம் திரு பிரபாகரனால் அங்கீகரிக்கப்பட்டதா?

கிட்டு: அவரது அங்கீகாரம் இன்றி தலைமைப்பீடம் இதனை அறிவித்திருக்காது.

கேள்வி: அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்திய கடைசிச் சுற்றுப் பேச்சில் ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கவேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாக நீங்கள் வைத்தீர்கள். உங்களின் இன்றைய நிலை என்ன?

கிட்டு: அது அந்த நேரத்தில். இப்போது நாம் பேச்சுக்களை நடத்தும் படிதான் கோருகின்றோம். பேச்சுக்களின் போது அரசமைப்பில் மாற்றங்கள் செய்வது அல்லது அரசமைப்பையே ரத்துச் செய்வது ஆகிய கோரிக்கையை முன்வைக்கும் சூழ்நிலை ஏற்படக்கூடும்.

கேள்வி: இறுதியாக... உங்களுடைய யுத்த நிறுத்தம் குறித்து அரசு எப்படி நடந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

கிட்டு: பந்து இப்போது அவர்கள் பக்கம். நியாயமான நல்லெண்ணத்துடன் அரசு நடந்து கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம். எப்படி நடந்து கொள்ளும் என்று என்னால் சொல்லமுடியாது. ✶

## தமிழகத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி நிலையை ஏற்படுத்தும்படி, இலங்கை அரசைத் தாம் கோரியிருப்பதாகவும் பிரதமர் சந்திரசேகர் சொன்னார்.

## யுத்த நிறுத்த..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டம் அம்பலாந்துறை நயினிருந்து கிரான் துறைக்கு சென்று கொண்டிருந்த தமிழ் பொதுமகன் ஒருவனை அரசபடையினர் வழிமறித்துத் தாக்கி உடைமைகளை பறித்துச் சென்றனர்.

★ ஞாயிறன்று மட்டக்களப்பு 37 ஆம் கிராமம் பாளையடி வெட்டையில் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்த யோகநாதன் (வயது 35) என்ற தமிழர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ திருமலை மாவட்டம் தம்பலகாமத்தில் அகதி முகாமிலிருந்த தமது உறவினர்களைப் பார்க்கச் சென்ற பத்துப் பேரை படையினர் கைது செய்துள்ளனர்.

★ நேற்று முன் தினம் காலை 9 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து இரண்டு தடவைகள்படையினர் 'கனன் ஷெல்' தாக்குதல் நடத்தினர். அவற்றினால் விடுதலைப் புலிகளின் காவல் அரண் ஒன்று சிறிது சேதமுற்றது.

★ நேற்று பலாலி முகாமிலிருந்து படையினர் தொண்டமானாறு நோக்கி முன்னேற முயன்றனர். ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி ஒன்று வழியில் வெடித்ததை அடுத்து, அவர்கள் மேலும் முன்னேறாமல் திரும்பினர்.

★ நேற்றுக் காலை 9.30 மணியளவில் கரம்பொன்னிலிருந்து சின்ன மூளாய்ப் பக்கமாக முன்னேறி வந்த இராணுவத்தினர் புலிகளின் காவல அரண்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் திரும்பிச் சென்றனர் புலிகளுக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. அவர்கள் திருப்பித் தாக்கவும் இல்லை.

—இவ்வாறு விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (உ)

## ஆண்டின் நாயகர் சதாம்!

லண்டன், ஜன: 8

பி. பி. ஸியின் உலக சேவை நேயர்கள் "கடந்த வருடத்தின் மனிதராக" ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னை வாக்கு மூலம் தெரிவு செய்திருக்கிறார்கள்.

உலகச் சேவை நேயர்களின் இக்தெரிவு பி. பி. ஸிக்கும், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சுக்கும் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"லண்டன் ஒப்சேவர்" பத்திரிகை இச்செய்தியை நேற்று முன்தினம் வெளியிட்டது. (உ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 8

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கி வெடிச் சம்பவத்தில் வினோத் (பவள) என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்தார். (உ)

## மரணம்

யாழ்ப்பாணம், ஜன: 8

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான திகல் (நீர்வேலி) நேற்று நெஞ்சுவலி காரணமாக இயற்கை மரணமடைந்தார். (உ)

## பயணிகள் மீது கெடுபிடி

தென்மராட்சி, ஜன.8

அலைதீவிலிருந்து படகு மூலம் குறிகாட்டுவான் வரும் பயணிகள் நயினாதீவு படை முகாமில் படையினரின் கெடுபிடிக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து வரும் இளைஞர்களும் அரச ஊழியர்களும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-117)

## இயக்கச்சி நோக்கி ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஜன. 8

கடந்த 4 ஆம் திகதி இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை மூன்று மணி வரை ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி இருபதிற்கு மேற்பட்ட ஷெல்கள் வீசப்பட்டன.

குண்டுகள் யாவும் வயல்களிலும், தோட்டங்களிலும் விழுந்து வெடித்தன. (இ-117)

## விலைகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பாவனைப் பொருள்களின் விலைகள் கடந்த இரண்டு மூன்று நாட்களாகச் சரியத் தொடங்கின.

அந்தச் சரிவு வர்த்தகர்களுக்குப் பெரும் மலைச்சலை உண்டாக்கியது. புதிய தந்திரம் ஒன்றைக் கையாண்டார்கள்: வவுனியா ஊடாக வாகனம் போய்வர மீண்டும் தடங்கல் என்று வதந்தியைக் கட்டிவிட்டு பொருள்களின் விலைகளை உயர்த்திவிட்டார்கள்.

நேற்றுக் காலையில் ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 29 ரூபாவாக விற்றது. வதந்தி பரவியதும் அது 36 ரூபாவாக "ஜாக்" அடித்து உயர்த்தப்பட்டது. இப்படி மாலையில் பல பொருள்களின் விலைகள் உயர்ந்தன.

விஷயமறிந்த வட்டாரங்களிடம் வினவியபோது, வாகனப் போக்குவரத்தில் எந்த இடத்திலும் எவ்வித தடங்கலும் புதிதாக ஏற்படவில்லை என்று அவை உறுதியாகத் தெரிவித்தன.

பாவம் மக்கள்! வதந்தி மன்னர்கள் அவர்கள் பணத்தைச் சுரண்டும் அளவுக்குச் சுரண்டுகிறார்கள்!! (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எத்தகைய தீர்வு? மாநாட்டில் கேள்வி!

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் (United Sri Lanka) காண்பதா? — அல்லது ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் [Unitary Frame work] காண்பதா?

இந்தக் கேள்வி கடந்த வியாழன் ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் நடந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டில் எழுப்பப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனம் குறித்து அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள ஜனாதிபதி அக்கூட்டத்தை அழைத்திருந்தார்.

சில கட்சிகளின் தலைவர்களும் யுத்த நிறுத்தப் பிரகடனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏகோபித்த குரலில் தெரிவித்தனர்.

பின்னர் விடுதலைப் புலிகளுடன் எந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவது என்பது பற்றிய விவாதம் இடம் பெற்றது.

பெரும்பாலான கட்சித் தலைவர்கள் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்கு உட்பட்டதாகவே பேச்சுகள் அமைய வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்தனர்.

ஆனால் இலங்கை லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சணா அமரதுங்கா பேச்சுக்களை ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் தான் நடத்த வேண்டும் என்று சொன்னார்.

ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் என்றால் என்ன என்பதை விளக்கும்படி அவரிடம் ஏனையோர் கேட்டனர்.

அப்போது டாக்டர் அமரதுங்கா, "கடைசி முடிவாக சமஷ்டி அரசமைப்பையும் ஏற்கத் தயாராக வேண்டும்" — என்று விளக்கமளித்தார்.

இதனைக் கேட்ட ஜனாதிபதி பிரேமதாஸா, "சணா பெரிய தாராளவாதி (Chanaka is a great liberal)" — என்று சொன்னார். [இ-எ]

# யுத்த நிறுத்த அறிவிப்பு; அரசுக்கு நெருக்கடி

## நவசமசமாஜக் கட்சி அறிக்கை

கொழும்பு, ஜன 8

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனம், பிரேமதாஸ அரசாங்கத்தை புதிய நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளது.

நவசமசமாஜக்கட்சி வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடுள்ளது.

கட்சியின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் வழங்க முடியாத, திறமை அற்றதாகவே பிரேமதாஸ அரசு இருக்கிறது.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தமும் இந்தத் திறமையற்ற அரசாங்கத்தினையும் எந்தத் தீர்வையும் காண வழி நடத்தாது.

எப்படியாயினும், வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு நாம் அரசைக் கோருகின்றோம்.

அத்தியாவசியப் பொருள்களான உணவு, மருந்துவகைகள், பசளை ஆகியவை போதுமான அளவு அனுப்பி வைக்கப்பட வேண்டும். சுகாதார மற்றும் கல்விச் சேவைகள் மிகக் குறைந்த தாமதத்துடன் சகஜ நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கில் உள்ள நவசமசமாஜக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கியதாக யுத்த நிறுத்தத்தை விஸ்தரிக்கும் படி விடுதலைப் புலிகளை நாம் வலியுறுத்திக் கோருகிறோம்.

அதில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# யுத்த நிறுத்தம் குறித்து தொடர்ந்து அவதானிப்பு

கொழும்பு, ஜன 8

சண்டை நிறுத்தம் பற்றி இப்போது அவதானிக்கப்படுவதாகவும் -

இறுதி முடிவு எடுக்கப்படும் வரை சண்டை நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழு நியமிக்கப்படுவது பற்றி ஒன்றுமே செய்யப்படமாட்டாது என்றும் -

இராணுவ தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. [இ-எ]

# தீர்வு காண இந்தியா முயற்சி எடுக்குமாம்

யுத்த நிறுத்தம் வெற்றியடைந்து சமாதான வழிகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா சகல முயற்சிகளும் எடுக்கும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத்ஜா நுவரெலியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண எனது சேவை தேவைப்பட்டால் நான் உதவத் தயாராக இருக்கின்றேன்" - என்று அமைச்சர் தொண்டமான் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார். [இ-எ]

# பீரங்கித் தாக்கு

புங்குடுதீவு தெற்குக் கரையை நோக்கி பீரங்கிப் படகிலிருந்து தொடர்ச்சியாக குண்டுகள் ஏவப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது. ஆஸ்பத்திரியை அண்டிய பகுதிகளில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இப் பகுதியிலிருந்த மக்கள் தாம் பிள்ளைகளுடன் புனித சவேரியார் தேவாலயத்தில் இரவு தஞ்சமடைந்திருந்தனர். (இ-117)

# மாதாந்த இலக்கு வைத்து அரச நிறுவனங்களின் பணி

## யாழ் மாவட்டத்தில் அமுலாகும்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் அபிவிருத்தி, புனரமைப்பு, பராமரிப்புப் பணிகளை ஒருங்கிணைந்த ரீதியில் திட்டமிட்டுச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது சம்பந்தமாக யாழ். செயலகத்தில் நேற்று மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட சில முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ திணைக்களங்களும் மற்றும் அரச நிறுவனங்களும் 1991 ஆம் ஆண்டில் தமக்குக் கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகளை வைத்துத் தனித்தனியே வேலைத்திட்டங்களைத் தயாரிக்கவேண்டும். அந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு மாதாந்த இலக்குகளை வகுக்க வேண்டும்.

★ திட்டங்கள் அல்லது சேவைகளுக்கு உரிய மாதாந்த இலக்குகள் சரிவரச் செயற்படுத்தப்படுகின்றனவா, தடங்கல்கள் ஏதும் உண்டா என்பது குறித்து முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்துக் கண்காணிக்க வேண்டும்.

★ திட்ட அறிக்கைகள் இலக்குகள் என்பன சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் மாவட்ட மட்டத் தலைமையகத்தில் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

★ பின்னர் அவை மாவட்ட திட்ட அமுலாக்கல் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு திணைக்களத்தினதும் செயற்பாடுகள் உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்தில் சீராக ஒழுங்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

★ திணைக்களத் [illegible] திட்டங்கள் [illegible] உறபத்தி, [illegible] என்பனவற்றுக்கும் [illegible] படவேண்டும்.

★ [illegible] ஒதுக்கீட்டினை [illegible] பயனுள்ள முறையில், பரவலாகப் பாவிக்கக்கூடிய விதத்தில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். [அ-6]

# பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா—1989 பகுதி நேர, முழு நேர பரீட்சை, மற்றும் சங்கீத, பரதநாட்டிய டிப்ளோமா பரீட்சை—1989, கலை (முதுமாணி) ஆகிய பரீட்சைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கலை முதுமாணிப் பரீட்சையில், கல்வி கற்கை நெறியின் திரு. கே. கந்தசாமியும் தமிழ் கற்கை நெறியில் திரு. எம். ரகுநாதனும் சித்தியடைந்துள்ளனர். [உ-6-5]

# இராணுவ முகாம்கள் பெரு வெள்ளத்தில்!

## திருமலையில் இந்த நிலைமை

கொழும்பு, ஜன. 8

கடந்த சில தினங்களாக திருகோணமலையில் பெய்து வரும் பெருமழையின் காரணமாக அங்கு சில இராணுவ முகாம்கள் நீரில் மூழ்கியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

திருமலை முந்துநகர் இராணுவப் பிரிவின் சிப்பாய்கள் வீதித்தடை நீக்க வேலைகளுக்குச் சென்றுவிட்டு திரும்பிய போது முகாம் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்ததையும் —

முகாம் கட்டடங்களுக்கு ஊடாக இரண்டு அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்ததையும் கண்டனராம்.

மார்பளவு வெள்ளத்துக்கு ஊடாக - துப்பாக்கிகளை தலைக்கு மேலே உயர்த்திய படி — அவர்கள் நடந்து முகாமை அடைந்தனர். [உ]

## கொழும்பு செல்லும் தமிழர்

# பொலீஸ் நிலையத்தில் பெயர் பதிவு செய்க!

கொழும்பு, ஜன. 8

பிற மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் தாமிகள் தங்கப்போகும் பகுதியில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தங்கள் பெயர், மற்றும் விபரங்களைப் பதிவு செய்து கொள்வது அவசியம்.

-இவ்வாறு பொலிஸார் அறிவுறுத்தியிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

தங்கள் பகுதிகளில் புதிதாகக் காணப்படும் எவரையும் பொலீஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தி, புலனாய்வு அறிக்கை பெற்ற பின்னரே பொலீஸார் விடுவிப்பர் என்று தெரிவிக்கப்பட்டதாக அச்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது. [உ]

# திருடரை துரத்தியவர் மீது கத்திக்குத்து!

தென்மாராட்சி, ஜன. 8

அரச தென்னம் தோட்டம் ஒன்றில் தேங்காய் திருடச் சென்றவர்களை துரத்திய தோட்டக் காவலாளி கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமானார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இளாலி காரைக்காட்டுப் பகுதியில் இடம் பெற்றது.

இது தொடர்பாக நால்வரை விடுதலைப் புலிகள் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். (இ-117)

# தேசிய பாடசாலைகளில் அனுமதிப் பரீட்சை ஒரேதினத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜன 8

யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரு தேசிய பாடசாலைகளிலும் ஆண்டு 6 க்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதிப் பரீட்சையை கல்வித் திணைக்களமே நடத்தும்.

— இவ்வாறு நேற்று கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான திகதி தீர்மானிக்கப்பட்டு பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டபின், ஒரே தினத்தில் பரீட்சையை கல்வித் திணைக்களம் நடத்தும் எனக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [உ-5]

# ஆசிரியர் இடமாற்றம் பெப்ரவரி 15 இன் பின்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான உள்ளூர் இடமாற்றங்கள் யாவும் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்குப் பின்னரே மேற்கொள்ளப்படும் எனக் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த இடமாற்றம் தொடர்பாக ஆசிரிய சங்கத்தினருடனும் கலந்தாலோசிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை—

தீவகப் பகுதிகளில் இருந்தும் பருத்தித்துறை கிழக்கில் இருந்தும் ஆசிரிய பயிற்சி பெறப் பல ஆசிரியர்கள் சென்றுள்ளதால் அவர்களது வெற்றிடங்களுக்கு வேறு ஆசிரியர்கள் தற்காலிக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும்—

இவ்வாறு தற்காலிக இடமாற்றம் பெறுவோர் அந்த இடங்களில் 2 வருடங்கள் பணிபுரிந்த பின்னர் மீண்டும் தமது பழையபாடசாலைக்கே மாற்றப்படுவர் - என்றும் அவர் சொன்னார். (உ-5)

# விமான எரிபொருள் திடீர் விலை அதிகரிப்பு

விமானங்களுக்குத் தேவையான எரிபொருளின் விலை திடீரென பல மடங்கு அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில், வளைகுடா நெருக்கடி தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து - சர்வதேச விமான சேவைகள் தங்களின் விமான பயண பாதைகளை மாற்றி அமைத்து வருகின்றன.

யுத்தம் ஒன்று ஏற்படும் இடத்து வளைகுடாவில் அபாயகரமான பகுதிகள் என்று கருதப்படும் இடங்களைத் தவிர்த்து புதிய பயண பாதைகள் தயாரிக்கப்பட்டு உள்ளன என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

# ஹெய்தியில் நேற்று திடீர் ராணுவப் புரட்சி!

கரிபியன் தீவுகளில் ஒன்றான ஹெய்தியில் இராணுவப் புரட்சி ஒன்று நேற்று இடம்பெற்றது.

முன்னர் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி டுவாலியரின் நெருங்கிய ஆதரவாளரும் பாதுகாப்பு அமைச்சராய் பணியாற்றியவருமான டாக்டர் லாபொன்ரெனி ஆட்சியை இராணுவத்தின் துணையுடன் கைப்பற்றினார் என்று அறிவிக்கப்படுகிறது.

அண்மையில்தான் ஹெய்தியில் [illegible] ஜனாதிபதி [illegible] பெற்றது: இடதுசாரியான கிறிஸ்தவ மதகுரு அரிஸ்டைட் என்பவர் அத்தேர்தலில் தெரிவானார். அவர் பதவி ஏற்பதற்குச் சில தினங்கள் இருக்கையில் இராணுவப் புரட்சி இடம்பெற்றுள்ளது. (உ-எ)

## அரசு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுந்திருப்பதாகவும்—

போர் நிறுத்தம் நீடிப்பது சந்தேகத்திற்கு இடமான தொன்றாகவே கருதப்படுவதாகவும் [illegible] செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. [உ-எ]

# விபத்து வேளையில் நடந்த திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 8

மற்றவர் துன்பம் கண்டு, அவர்கள் வேதனைப்படுவதைப் பார்த்து அனுதாபப் படுகிறவர்கள், பரிதாபப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். இரக்கத்தின் நிமித்தம் உதவுவோரும் உள்ளனர்.

பிறருக்கு ஆபத்து ஏற்படும் வேளையில் தாம் எதுவுமே செய்ய முடியாமல் செயலற்றுப்போவோர் மூன்றாவது ரகம்.

செயலற்று இருப்பவர்களிடம், சந்தர்ப்பம் பார்த்து அவர்களின் உடைமைகளை அபேஸ் செய்வோர் நான்காவது ரகத்தினர்.

நான்காவது ரகத்தைச் சேர்ந்த ஒர் அபேஸ் பேர்வழியிடம் முக்கிய தஸ்தாவேஜுகள், வங்கி டிராப்டுகள் கொண்ட தனது பிரயாணப் பெட்டியை பெண் ஒருவர் பறிகொடுத்த பரிதாப சம்பவம் கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் நடந்திருக்கிறது.

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த அந்தப் பெண்ணுக்குப் பொல்லாத காலம். பொறியியலாளர் ஒருவர் மிதிவெடி விபத்துக்குள்ளான அதே தினத்தில் அவரும் சகோதரியும் கொழும்புக்குப் பயணம் புறப்பட்டனர். பொறியியலாளர் சென்ற அதே வாகனத்திலேயே அவர்களும் வவுனியா சென்றனர்.

வவுனியாவில் இறங்கி, சைக்கிளோட்டி ஒருவருடன் ரயில்வே நிலையம் நோக்கிச் சென்ற வேளையிலேயே, சகோதரிகளுக்குச் சற்றுத் தொலைவிலேயே மிதிவெடி விபத்து நடந்தது.

பொறியியலாளரின் கால் துண்டிக்கப்பட்டதும், திகிலடைந்த அந்தப் பெண் சைக்கிளை நிறுத்தச் சொல்லி இறங்கினார். சில நிமிட நேரம் செயலற்று திகைத்துப் போய் நின்றார்.

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சைக்கிளோட்டி பெட்டியுடன் மறைந்து விட்டான். தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை.

பெட்டியின்றி எப்படிப் பயணத்தைத் தொடர்வது? சகோதரிகள் இருவரும் வெறுங்கையுடன் யாழ்ப்பாணம் திரும்பினர். [அ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 192/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 8. 1. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org